217 பேர்கள் ஆண்கள், 97 பேர்கள் பெண்கள். மின்சாரத் துறையில் 29 பேர்கள் ஆண்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கை அந்தத் தொழிலாளர்களின் சார்பிலே வைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் துறை அலுவலர் அவர்களிலே ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை நிரந்தரமாக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார். நகர மன்றம் தற்காலிக பணிபுரிகின்றவர்களில் யார் யாரை நிரந்தரமாக்க வேண்டுமென்று தொழிலாளர் துறை அலுவலர் ஒரு பட்டியலை அனுப்பி இருக்கிறார். அந்தப் பட்டியல் நகரமன்றத்தின் பரிசிலனையில் இருக்கிறது. அது முடிந்தபிறகு நகரமன்றம் அதுபற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றி வந்தவுடனே அது அமுலாக்கப்படும்.

நகராட்சிகளில் பணிபுரியும் மின்சாரத் தொழிலாளர்கள்

*301. வினா—திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, கோவை, தஞ்சை ஆகிய நகரசபைகளின் கீழ் வேலை செய்யும் மின்சாரத் தொழிலாளர்கள் தங்களுக்கு மின்வாரிய ஒப்பந்தப்படி சம்பளம் தரவேண்டுமென்று 1969–70-ல் நடத்திய கிளர்ச்சியின் மீது சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நகராட்சிகளில் உள்ள பொதுப் பிரிவு மற்றும் மின்சாரப் பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் குறித்துத் தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக்குழு செய்துள்ள பரிந்துரைகள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளதோடு, அவர்களின் சம்பள விதங்களும் திருத்தியமைக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நகராட்சிகளில் உள்ள பல்வேறு மின்சார நிறுவனங்களின் குறைகளைப் பற்றிப் பரிசிலனை செய்ய குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்பொழுது மின்சார சப்ளை மதுரை மாநகராட்சி, தஞ்சை, கரூர், பொள்ளாச்சி ஆகிய நகராட்சி இவற்றிலே இருக்கிறது. அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே ஒரு ஸ்பெஷல் வேஜ் கமிட்டி ஜி.ஓ.எம்.எஸ்.என். 231, 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதி பிரகாரம் போடப்பட்டு இருக்கிறது. இரண்டாவது சம்பளக் கமிஷன் ரிப்போர்ட் வந்தும் கூட மின்சாரப் பணியாளர்கள் சம்பள உயர்வு பெற்றும்கூட இவர்கள் பெறமுடியாத நிலைமை இருப்பதால் சீக்கிரத்தில் அந்த சிபாரிசுகளை வெளியிட்டு அவர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

1971 ஜூலை 20]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் பொறுத்தவரையில் பொதுப் பிரிவு மற்றும் மின்சாரம் பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் குறித்துத் தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக் குழு செய்துள்ள பரிவுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு அவர்களின் சம்பள விகிதங்களும் திருத்தியமைக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

நகராட்சிகளில் உள்ள பல்வேறு மின்சார நிறுவனங்களின் குறைகளைப்பற்றிப் பரிசீலனைசெய்ய குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. அந்தக் குழுவில் சி. என். ராகவன் கூட்டுச் செயலாளர், நிதித்துறைத் தலைவராக இருக்கிறார், மேலும் நகராட்சி நிர்வாக அதிகாரியும், அரசு தலைமை இன்ஸ்பெக்டரும் தொழிலாளர் துறை ஆணையரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். விரைவில் அதனுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

Junior Basic School at Poosaripatti

* 320 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a Junior Basic School was opened at Poosaripatti in Madurai District, in the academic year 1967–68; and

(*b*) if so, the strength of the school in 1967–68 and 1968–69?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ):

வருடம்	எண்ணிக்கை
1967–68	*114 (59 மாணவர்கள், 55 மாணவிகள்)*
1968–69	*165 (86 மாணவர்கள், 79 மாணவிகள்)*

Dr. H. V. HANDE: Sir, may I know whether any person went to the court in regard to this matter and wheher the court has passed judgment against the order of the Director of Public Instruction? May I know the full details about it?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த பூசாரிபட்டி என்ற ஊரிலே டி. எஸ். ராஜன் உதவிபெறும் ஜூனியர் ஆதாரப்பள்ளி துவக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் சார்பாகவும் ஒரு பள்ளி துவக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து டி. எஸ். ராஜன் உதவி பெறும் நிறுவனத்தினர் ரிட் பெட்டிஷன் போட்டார்கள். அது உயர் நீதிமன்றத்திலே விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எண்ணிக்கை, மாணவர்கள் தன்மை ஆகியவற்றைப் பார்த்து இரண்டு பள்ளிகளும் இயங்குவதற்கு இடம் இருக்கிறதா என்று பார்த்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதன் பேரில் பள்ளி இயக்குநர் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி மூலமாக ஆராய்ந்து பார்த்து இரண்டு பள்ளிகளும் இயங்கலாம்,